**செய்தி வெளியீடு எண்: 054** **நாள்: 22.01.2019**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்கள் சட்ட மன்ற கூட்டத்தில் போக்குவரத்து துறை மானியக் கோரிக்கையின்போது, தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு சார் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சாலை பாதுகாப்பு மன்றம் உருவாக்கப்படும் என்று அறிவித்தார்.

தமிழகத்தில் அதிகமான சாலை விபத்துக்கள் ஏற்படுகின்றன. கடந்த 2018ம் ஆண்டு மட்டும் 63,920 சாலை விபத்துக்கள் மற்றும் 12,216 உயிரிழப்புக்கள் நிகழ்ந்துள்ளன. நாள்தோறும் ஏறக்குறைய 175 சாலை விபத்துக்கள் ஏற்பட்டு, அதன்மூலம் 33 நபர்கள் தினசரி உயிர் இழக்க நேரிடுகிறது. எனவே இளம் சிறார்களுக்கு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியமாகிறது. அந்த சிறார்கள் சாலை பாதுகாப்பு தாங்கள் மட்டும் பின்பற்றாமல், தங்களுக்கு நெருக்கமானவர்கள், நண்பர்கள், உறவினர்கள் மற்றும் சுற்றத்தாரிடம் காலப்போக்கில் கொண்டு செல்வார்கள். எனவே, பள்ளிகளில் சாலை பாதுகாப்பு மன்றம் உருவாக்குதல் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

அதனால், தமிழகத்தில் உள்ள 7870 அரசு பள்ளிகள், அரசு சார் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சாலை பாதுகாப்பு மன்றம் உருவாக்க தமிழக அரசு அரசாணை எண்.2438, உள் (போ.வ.5) துறை, நாள்.31.12.2018 வெளியிட்டுள்ளது. அதன் மூலம் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வின் முக்கியத்துவத்தை பள்ளியில் பயிலும் இளம் சிறார்களிடையே ஏற்படுத்த, அவர்களுக்கு சாலை பாதுகாப்பு மற்றும் அடிப்படை சாலை விதிகளை பின்பற்ற பயிற்சி அளிக்கப்படும்.

சாலை பாதுகாப்பு மன்றத்தை மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் **திரு கே.ஏ. செங்கோட்டையன்** அவர்களும், மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் **திரு எம்.ஆர். விஜயபாஸ்கர்** அவர்களும், எம்.சி.சி. மேல்நிலைப்பள்ளி,

உறாரிங்டன் சாலை, சேத்துப்பட்டு, சென்னையில் 22.01.2019 அன்று காலை 09.30 மணிக்கு துவக்கி வைத்தனர். திரு பிரதீப் யாதவ், இ.ஆ.ப., முதன்மை செயலாளர், பள்ளி கல்வித்துறை அவர்களும், திரு சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப., சாலைபாதுகாப்பு ஆணையர்/போக்குவரத்து ஆணையர் அவர்களும், திரு வி.சி. இராமேஸ்வரமுருகன், இயக்குநர், பள்ளிக்கல்வித்துறை அவர்களும் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**